**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>**

**<u>M.C.O.P.No.17/2023</u>**

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | ஏழுமலை |
| தகப்பனார் / கணவர் | .. | முனுசாமி |
| வயது | .. | 62 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | செங்காட்டான்குண்டில் |
| தாலுக்கா | .. | செய்யாறு |

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

விபத்து எங்கு நடந்தது என்றால் நான் செய்யாறு பேருந்து நிலையத்தில் இருந்து செங்காட்டான்குண்டில் கிராமத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டு இருந்தபோது செய்யாறு, தபால் நிலையம் அருகில் லட்சுமி நாராயணன் மினி பேருந்து எனது இருசக்கர வாகனத்தின் பின் பக்கம் மோதி விபத்து ஏற்பட்டது. அதன்பிறகு செய்யாறு, அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்து, பின்னர் மேல்சிகிச்சைக்காக வேலூர் அடுக்கும்பாறை அரசு மருத்துவமனையில் சேர்ந்தேன். அங்கு 15 நாட்கள் சிகிச்சை பெற்றேன். எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல, அணிந்து இருந்தேன். விபத்து நடந்த இடம் போக்குவரத்து நெரிசலான சாலை என்றால் சரிதான். அதனால் மேற்படி பேருந்து நிதானமாக தான் வந்தது என்றும், நான் தான் அதன்மீது மோதி விபத்து ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு அறுவை சிகிச்சை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான், எலும்பு முறிவு தான் ஏற்பட்டது.

ம.த.சா.ஆ.3 ஆவணத்தில் நான் இரண்டு நாட்கள் மருத்துவமனையில் இருந்ததாக உள்ளது என்றால் சரியல்ல, 15 நாட்கள் சிகிச்சை பெற்றேன். எனக்கு ஏற்பட்டிருக்கும் காயம் சொற்ப காயம் என்றும், அதனால் நான் கேட்டிருக்கும் இழப்பீடு அதிகம் என்றாலும் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**